**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 104/2022**

**நாள்: 08.10.2025**

**அரசுத்தரப்பு சாட்சி : 15 (LW24)**

சாட்சி விசாரணையை காணொளி மூலம் விசாரணை நடத்துவதற்கு இரண்டு தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டதின் அடிப்படையில் சாட்சி வரவழைக்கப்பட்டுள்ளார். முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் உள்ள காணொளி அரங்கில் அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் உள்ளனர். சாட்சி திருமதி.பேபி இசக்கி பிரகதாம்பாள், அவர்கள் காணொளி மூலம் சாட்சி விசாரணை செய்வதற்கு உதவியாக காணொளி அரங்க ஒருங்கிணைப்பாளர் திருவள்ளூர் மாவட்ட அம்பத்தூர் தாலுகா நீதிமன்றத்தில் **திரு.M.பாரதி, தலைமை எழுத்தர், சார்பு நீதிமன்றம் அம்பத்தூர்** என்பவர் உள்ளார். சாட்சி, இந்நீதிமன்ற காணொளி அரங்க ஒருங்கிணைப்பாளர் திருமதி.T.கலைச்செல்வி, Translator என்பவர் மூலம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டார். சாட்சியின் அருகே வேறு யாரும் இல்லை என உறுதிபடுத்தப்பட்டு விசாரணை தொடர அனுமதிக்கப்பட்டது.

2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 08ம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய திருமதி.பேபி இசக்கி பிரகதாம்பாள் என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.10.08 16:05:04 +0530

| பெயர் | பேபி இசக்கி பிரகதாம்பாள் | ஜாதி | |
|---|---|---|---|
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

(A2, A3, A5, A6 ஆஜர். A1, A4, A7 ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது.)

முதன்மை விசாரணை:

நான் தற்போது மத்திய அரசாங்கத்தில் போதைப்பொருள் கட்டுப்பாட்டு மையத்தில் சார்பு ஆய்வாளராக அயல்பணியாக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 06.06.2021ம் தேதி மண்டலமாணிக்கம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது, கீழக்காக்காகுளத்தை சேர்ந்த மணிகண்டன் மனைவி காளீஸ்வரி என்பவர் கொடுத்த புகார்மனுவினை பெற்று, எதிர்மனுதாரர் ரமேஷ்குமார் த/பெ.செல்வராஜ், கீழநரியன் என்பவரையும், மனுதாரரையும் 07.06.2021ம் தேதி நேரில் அழைத்து விசாரணை செய்து, மனுதாரர் மேல்நடவடிக்கை வேண்டாம் என்று கேட்டுக்கொண்டதற்கு இணங்க இரு தரப்பினரையும் விசாரணை செய்து, மனு ரசீது எண்.37/2021 ஆக மனு ரசீது கொடுத்து விசாரணையை முடித்தேன். அந்த **மனு ரசீது அ.த.சா.ஆ.12** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

பின்பு 14.06.2021ம் தேதி திரு.ஆயர்ராமன் சிறப்பு சார்பு ஆய்வாளர் கீழக்காக்காகுளத்தை சேர்ந்த முத்துச்சாமி மகன் முத்துராஜ் என்பவர் கொடுத்த புகார்மனுவினை பெற்று, நிலைய குற்ற எண். 112/2021, பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii) இதச வாக வழக்கு பதிவு செய்து வைத்திருந்ததை நான்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.10.08 16:05:10 +0530

விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். பின்பு 15.06.2021ம் தேதி சம்பவ இடம் சென்று பாலசுப்ரமணியன் மற்றும் சுரேஷ் ஆகிய சாட்சிகள் முன்பு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மேற்படி இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வேறு சாட்சிகளை விசாரித்தேனா என்று ஞாபகம் இல்லை. பின்பு நான் கோவிலாங்குளம் காவல் நிலையத்திற்கு பணிமாறுதலில் சென்றதால், வழககு கோப்பினை நிலையத்தில் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

மனு ரசீது எண். 37/2021 என்பது குறித்து மட்டும்தான் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றால் சரிதான். குற்ற எண். 112/2021 தொடர்பாக முத்துராஜ் கொடுத்த புகாரில் ஆங்கிலத்தில் கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த புகார் சம்மந்தமாக வேறு விவரங்கள் எதையும் ஆய்வாளர் என்னிடம் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் மனு ரசீது எண். 37/2021 மற்றும் குற்ற எண். 112/2021 ஆகியவற்றை பற்றி மட்டுமே ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும், மற்ற விவரங்களை பற்றி என்னிடம் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை – இல்லை.

| | | |
|---|---|---|
| M. Bharathi | Deponent | T.Kalaiselvi |
| Head Clerk, | | Translator |
| Sub Court, | | Principal District Court, |
| Ambattur. | | Ramanathapuram. |
| Coordinator | | Coordinator |
| **Remote site** | | **Court site** |

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.10.08 16:05:14 +0530